தாவடி சைவ இளைஞர் சங்கப் பிரசுரம்: க.

உ
கணபதி துணை.

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

தாவையம்பதி

ஸ்ரீ அம்பலவாண வேத விநாயக சுவாமி

திருவூஞ்சல்,
திருக்காப்புமாலை,
திருநவமணிமாலை,
திரு ஒருபா ஒருபஃது.

இவை

ஆசிரியர்: சே. சிவப்பிரகாசம் அவர்களால்

செய்யப்பட்டு

தாவடி சைவ இளைஞர் சங்கத்தாரால்

வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாணம்,
நாவலர் அச்சுக்கூடம்.

ஆவணித்திங்கள்:] 3-9-43 [விநாயக சதுர்த்தி.

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி :: சுன்னாகம்,
இலங்கை.

கணபதி துணை.

முகவுரை.

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

யாமோ தியகல் வியுமெம் மறிவுந்
தாமே பெறவே லவர்தந் ததனாற்
பூமேன் மயல்போ யறமெய்ப் புணர்வீர்
நாமே னடவீர் நடவீ ரினியே.

மருவினிய மலர்ப்பாதம் மனத்தில்வளர்ந் துள்ளுருகத்
தெருவுதொறும் மிகவலறிச் சிவபெருமானென் றேத்திப்
பருகியநின் பரங்கருணைத் தடங்கடலிற் படிவாமா
றருளெனக்கிங் கிடைமருதே யிடங்கொண்ட வம்மானே.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றாள் தொழாஅ ரெனின்.

மனத்திலெழுந்த நற்சிந்தனையாற் சில நல்ல சொற்கள் வந்தன. அவை செய்யுள் வடிவமாக இங்குக் கூறப்பட்டுள்ளன.

இவற்றுள், ஊஞ்சலாவது "ஆசிரிய விருத்தத்தானாவது கலித்தாழிசையானாவது சுற்றத்தாரோடும் பொலிவதாகக் கூறலாகும்" காப்புமாலையாவது, "காத்தலாக மூன்று கவியாவது, ஐந்து கவியாவது, ஏழு கவியாவது பாடுவதாகும்" நவமணி மாலையாவது, "வெண்பா முதல் வேறுவேறுபாவும் பாவினமுமாக ஒன்பதுவர அந்தாதித் தொடையாற் பாடுவ

தாகும்" ஒருபா ஒரு பஃதாவது, "அகவல், வெண்பா, கலித்துறை என்பவற்றுளொன்றான் ஒருபஃதுப்பாட்டு அந்தாதித் தொடையான் வருவதாகும்." இவை பாட்டியலார் கூறும் இலக்கணங்களாகும்.

இவ்விலக்கணங்களுக்கு இசைய, திருவூஞ்சல், திருக்காப்புமாலை, திருநவமணிமாலை, திரு ஒருபா ஒருபஃது என்பன, தாவையம்பதியிற் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர்மீது பாடப்பட்டுள்ளன.

என் அன்பாற் செய்த இப்பாக்களுட் காணுங் குற்றங்களைந்து, குணமனோக்கிக்கொள்ளுதல், கற்றறிந்தமாந்தர்கடன்.

"திருவருளகம்"
தாவடி,
3-9-43.

சே. சிவப்பிரகாசம்,
ஆக்கியோன்.

உ

சிவமயம்.

சிறப்புப் பாயிரம்.

நவாலியூர்

ஸ்ரீமத், க. சோமசுந்தரப்புலவரவர்கள் இயற்றியது.

திருத்தாவை யம்பதிவாழ் வேதவிநா யகர்மீது சீர்சா லூஞ்சல்
அருத்திமிகு திருக்காப்பு மாலைநவ மணிமாலை யாதி யாக
பொருத்தமுறு பாமாலை புனைந்தளித்தான் பாவலர்கள்
புகழ்ந்து போற்ற
கருத்திலுறு பேரன்பாற் சிவப்பிரகாசப் பெயர்கொள்
கலைவல் லோனே.

உ

சிவமயம்.

தாவையம்பதி
ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயக சுவாமி
திருவூஞ்சல்.

காப்பு.

சீரேறு கமழ்கொன்றை துன்று வேணிச்
    சிவனுமையா டாவந்த தேவே முன்னாட்
காரேறு முகில்வண்ண னேத்தி ரோற்றுக்
    கட்செவியி னுருகீத்துக் கருது பொற்பார்
பேரேறு தொல்லுருவம் பெறமுன் னீந்த
    பெருங்கருணைத்தடங்கடலே பெருகு சொல்லால்
ஏரேறு திருவூஞ்ச லிசையான் பாட
    இன்பார்நின் னிணையடிகள் காப்பதாமே.

நூல்.

ஆசிரிய விருத்தம்.

ஓதிதரு வேதங்கள் கால்களாக
    உரைக்குமெழி லாகமங்கள் விட்டமாக
நீதிதரு ஞானகலை வடங்களாக
    நிலையான பிரணவமே பலகையாக
சோதிதரு கம்பலம் மந்திரங்க ளாகச்
    சொர்ணமணி யாசனத்து வைகிச் சோலை
வீதிதரு தாவையருட் கோயில் கொண்ட
    வேதமுதல் விநாயகரே யாடீ ரூஞ்சல். (௧)

சீரார்நற் பவளங்கள் கால்க ளாகத்
    திகழுமெழில் மணிமுத்தங் கயிற தாக
ஏரார்நற் பொன்னதுவே பலகை யாக
    எழிலாருந் திருவூஞ்சல் தனிலே மேவிப்

போரார்நல் லடியர்குழாம் போற்றி செய்யப்
பொழிலாருந் தாலவநகர் வாழு மெங்கள்
தீராவல் வினைதீர்க்குந் தேவ தேவாய்த்
திகழ்வேத விநாயகரே யாடி ரூஞ்சல். (௨)

பரிதியுடன் மதிதானும் பாங்கர் மேவிப்
பரிவுடனே வெண்கொற்றக் குடைக டாங்க
விரியுமொளிக் கவரிதனைக் காலோன் வீச
வீசுதிரைக் கடற்கிறையா லவட்ட மேந்தப்
புரிநரம்பின் யாழ்மீட்டுப் பொங்கு மன்பாற்
புகழ்சேர்தும் புருவுடன் நாரதர்தாம் பாடச்
சொரியுமலர்ப் பொழிற் றாலை யிடமாக் கொண்ட
சொல்வேத விநாயகரே யாடி ரூஞ்சல். (௩)

பூதகணம் புடைநின்று போற்றி செய்யப்
புண்ணியநல் லடியார்கள் வடந்தொட் டாட்டக்
கீதவிசை தும்புருநா ரதர்கள் பாடக்
கிளர்நடன மரம்பையர்க டாமு மாடச்
சீதமலி சோலைநிறை யாருந் தாலைச்
செழுங்கோயில் தனையிடமாக் கொண்டு வாழ்ந்து
பாதமல ரெமக்கருளும் பரிசு தோன்றப்
பரமன்ருள் விநாயகரே யாடி ரூஞ்சல். (௪)

மன்னுமறைக் குரியோனும் மாயன் றானும்
மலிநிதியான் புரந்தரனும் வடந்தொட் டாட்டப்
பின்னுமுள தேவருட் பணிகள் நாடப்
பிறழாது முறைபுரிந்து, பாங்கு மேவ
மின்னுமெழில் விஞ்சையாதர் விளங்கு தாளை
விதிநெறியே நடம்புரிய வினைகள் பாற
முன்னுமடி யார்க்கிரங்கு முகிலே தாலை
முதல்வேத விநாயகரே யாடி ரூஞ்சல். (௫)

அருள் பொழியுந் திருவதன மசைந்து தோன்ற
அரையுறுபீ தாம்பரமு மசைந்து தோன்றத்
தருமபய வாதகர மசைந்து தோன்றத்
தாழுமொரு தனிக்கரமு மசைந்து தோன்றக்
கருதரிய வங்குசநற் பாச மேந்துங்
காதலங்க ளவைதாமு மசைந்து தோன்றத்
திருவளருந் தாவைநகர் மேவு மெங்கள்
செல்வமணி விநாயகரே யாடி ரூஞ்சல். (சு)

பாதியுமை பங்கிருக்கும் பரம னன்று
பார்புகழ்முத் தமிழ்வல்ல வகத்தி யற்கு
ஆதியுடைத் தெனுந்திசை வைக வென்று
அருள்புரிய வன்னவருஞ் செல்லுங் காலைச்
சோதியுடைக் குண்டிகையின் தீர்த்த நீரைச்
சொல்லுறுநற் கொடியாகிச் சென்று வீழ்த்தி
நீதியுடைப் புரந்தரற்கா வருளுந் தாவை
நீடருள்சேர் விநாயகரே யாடி ரூஞ்சல். (எ)

தடவரைநேர் சதுர்ப்புயங்கள் தாமுமாடத்
தந்திமுகன் றனைக்கொன்ற கோடு மாட
இடம் வலமாங் கரந்தன்னி லேந்து பாசம்
எழில் பெறுமங் குசத்துடனே யிலங்கி யாட
வடமருவு புயமுடனே செவியு மாட
வண்ணமுறு பொற்குழையுந் தழுவி யாடத்
திடமான வடியார்செய் சேவை யேற்றுத்
திருத்தாவை விநாயகரே யாடி ரூஞ்சல். (அ)

காடமத மாதங்க முகத்தி னானைக்
காதியவச் செயல்தோன்றக் கருதுகின்ற
பொருவரிய வாகுவந்து புடையில் சிறப்பப்
பொன்னின் மணிப் பீடமதின் மீதி வர்ந்து

வருமடியார் தமக்கருளை வழங்க வென்று
வாழு மொரு வரமணியே வயங்கு மைந்து
கரதலமார் கணபதியே தாவை வாழுங்
கருதரிய விநாயகரே யாடீ ரூஞ்சல். (௯)

பொருவரிய புவனங்கள் போற்று கின்ற
புரந்தரற்குப் பொற்புடைய புதல்வ னாகிக்
கருதரிய பிரணவத்தின் கருத்தாய் மேவிக்
கயமுகனைக் கொன்றசுர ரிடரை நீக்கிப்
பொருவரிய வகத்தியற்கும் புரந்தரற்கும்
பொற்புடனே திருவருளைப் பொழிந்து பின்னர்
கருதரிய தாவைநகர் கருதி வாழுங்
கனகமணி விநாயகரே யாடீ ரூஞ்சல். (௧௦)

அத்திமுகன் றனைக்காதி யமரர்க் கந்நாள்
அருள்சுரந்த அற்புதமாம் மேன்மை யோங்கச்
சித்தி புத்தி தமை மணந்த தகவு மோங்கச்
சீராருஞ் செங்காட்டிற் சிவனை யேத்திப்
பத்திதரு பூசைபண்ணும் பரிசு மோங்கப்
பாகமதில் வல்லபைசேர் பண்பு மோங்க
முத்திபெற முயலுமன்பர் சேருந் தாவை
முன்னவராம் விநாயகரே யாடீ ரூஞ்சல். (௧௧)

வாழி.

உலகுவளம் பெருகவரு முகில்கள் வாழி
ஓதுமறை யாகமங்க ளுயர்ந்து வாழி
நலம்மலியு மந்தணரான் பூதி வாழி
நாவினுறை யைந்தெழுத்து நாளும் வாழி
குலவிவரு மடியார்கள் கூட்டம் வாழி
கோவேந்த ரறஞ்சைவ மோங்கி வாழி
தலஞ்சேருந் தாவைநகர் தன்னில் வாழும்
தனிவேத விநாயகர்தாள் வாழி! வாழி!!

திருவூஞ்சல் முற்றிற்று.

தாவையம்பதி
ஸ்ரீ அம்பலவாண வேத விநாயக சுவாமி
திருக்காப்புமாலை.

காப்பு.

காப்பு மாலைக வின்பெறு மொன்பதாம்
பாப்பு னைந்தப னுவலுஞ் சொற்றிட
காப்ப தாகுங் கணபதித் தேவநின்
பூப்பொ லிந்தபு னைகழ லென்றுமே.

நூல்.

ஆசிரியவிருத்தம்.

தாவையம் பதியென் றோதுந் தாவறு நகரந் தன்னில்
மேவுமைங் கரத்து வள்ளல் வியன்பதம் போற்றித் தாழும்
பாவமிக் குடையர் தாமும் பவமெலாம் நீங்கி வாழ்வார்
ஆவதிங் கிதுவே யாயி னடியவர்க் கறையற் பாற்றோ. (1

திருமுனி திருக்க ரத்திற் சேருமக் காக நீரை
வருமொரு காகமாகி வந்துநீ ரிந்தி ரற்குப்
பெருமகிழ் கூர வீழ்த்திப் பெறற்கருங் கருணை செய்தீர்
திருவருள் கூரந்து காப்பீர்! திருந்துநல் லன்பி னோர்க்கே

பேசுநல் லுலகந் தன்னிற் பேர்பெறு கடவு ளர்க்குட்
பேசருந் தலைமை யெய்திப் பிரணவப் பொருள தானீர்!
ஆசுசற் றேனுமில்லா அடியவர் தம்ம னத்துட்
டேசுமிக் குடைய ராகிச் சிறப்புட னிருந்து காப்பீர்! (3)

வேழநன் முகமும் நன்கு விளங்குவெண் ணீற்றின் தேசும்
தாழுமோ ரிரண்டு காதுந் தயங்குமுப் புரிநூன் மார்பும்
வாழுமோர் நயனம் மூன்றும் வயங்கு மைங்கரமும்போற்றித்
தாழவைங் கரத்து வள்ளல் தண்ணரு ளீந்து காக்கும் (4)

சங்கரன் தனக்குவாய்த்த தனிப்பெருங் கடவுளே! யெம்
மைங்கரத் திறையே யங்கொ ராதாரத் தெழுந்த தேவே!
நங்களுக் குற்ற கண்ணின் நன்மணி யனைய கோவே!
பொங்குநல் லருள்செய் தெம்மைப் புரந்துநீ காத்திடாயே!
அம்பிகை தனய னே!யெம் மன்புருவான மூர்த்தி!
நம்பியுன் பாதம் போற்றும் நல்லவர்க் கருளும் நல்ல
தும்பிமா முகனே! யெங்கள் சொற்றுணை யான சோதீ
அம்புவி தனிலே யெம்மை யன்பொடு காத்திடாயே. (6)

குருமணி நங்கள் கண்ணுட் கருமணி குருந்தி னீழற்
குருமணி யீன்றதூய குலமணி குலத்தைக் காக்க
வருமணி வந்திப்போர்க்கு வரமணி வல்ல வைதன்
அருமணி யாகவைகு மைங்கரா அருளிக் காப்பாய். (7)

திருக்காப்புமாலை முற்றிற்று.

தாவையம்பதி

ஸ்ரீ அம்பலவாண வேத விநாயக சுவாமி

திருநவமணிமாலை.

வெண்பா.

இன்பம் பெருக்கி இருளகற்றி யெஞ்ஞான்றுந்
துன்பந் துடைத்துத் துணையாகும்—அன்புள்
ளுருகநின் றுள்ளே யுணர்வராற் றாவை
மருவீசன் செம்பொனடிச் சீர். (1)

தரவுக் கொச்சகக் கலிப்பா.

சீர்பெறுநற் றிருநகராய்த் திகழ்ந்திடுமித் திருத்தாவை
ஏர்பெறவே எழுந்தருளி யினிதிருந்தே யினிதேத்தும்
பேர்ப்பொருளாம் பிரவணத்தி னுருவாகிப் பிறங்கிடுமே
ஆர்வரினு மவர்க்கருளு மானைமுகப் பெருந்தேவே. (2)

கலிவிருத்தம்.

தேவர் கோனுடைத் தேங்கமழ் பூம்பொழில்
தாவி லாதுத ழைத்தமே லோங்கிட
நாவில் வல்ல வத்தியன் காசநீர்
தாவி வீழ்த்தினோன் தாள்கள் பணிகுவாம். (3)

கட்டளைக் கலித்துறை.

பணிவார் தமது பவவினை யோட்டிப் பரிவுடனே
அணிவார் மகிழு மகமகிழ் மாவு மருகிருக்கும்
அணியார் திருநெடு வீதிசூ ழாலய முன்னுறைந்து
நணியா ரியாவர்க்கும் நல்லரு ளீந்திருந் தாண்டிடுமே.

கலித்துறை

ஆளும் பரிசொன் றறியா தெவரும் அயர்வாராய்ச்
சூழும் படிநின் றினிதே யேத்தித் தொழுதாடி
வீழுவர் படியில் விம்முவ ரெங்கும் வியர்வார
நாளுமித் தாவை நல்லரு ளோனை நல்லன்பால் (5)

அன்பே! யருளே! யறிவே! யெங்க ளாரமுதே!
இன்பே! யிபமா முகனே! யென்றே சிலர்சேர்வார்;
துன்பே யிலைநாம் தொழுதேத் துங்கா லெப்போதும்
அன்பே சொரிந்திட் டருள்வா யென்றே சிலர்சேர்வார்

கலிவிருத்தம்

சேர்வர் தாளைத் திருநக ரந்தனில்
சீர்சேர் முத்தமிழ்ச் செல்வக் குமரனும்
ஆர்வ லர்தொழு மையையு மென்பாற்
பார்பு கழ்ந்திடு பாவலர் யாருமே. (7)

யாரும் வந்துநன் னுண்மலர் தூவியே
சேருமன்பிற் றிளைத்துமு றுகியன்
யாருந் தன்மைய ராய்விடிற் றுவையிற்
சேரு முன்னவன் சேர்ந்தருள் செய்வனே. (8)

செய்யும் நற்பணி செய்கவன் றேண்கழற்
குய்யும் வண்ண முடனருள் செய்குவன்
வெய்ய யானை முகத்தனை மேலைநாட்
செய்ய தேவர்க்காச் செற்றன னென்பவே. (9)

திருநவமணிமாலை முற்றிற்று.

தாவையப்பதி

ஸ்ரீ அம்பலவாண வேத விநாயக சுவாமி

திரு ஒருபா வொருபஃது.

விநாயக வணக்கம்.

மருவார் புரமெரித்த மங்கையுமை பங்கன்
தருவா ரணமுகத்த தர்தா—இருவார்
ஒருபா வொருபஃதெனு மொண்மாலை யோதத்
திருவார் திருவருளைச் செய்.

நூல்

கலித்துறை.

தாதாடி வண்டாடு தண்பொழில் சூழ்தாவை நகர்மேயவென்
றீதாடி னைகாண் முன்னின்ற பனிபோற் சிதைந்தோடியே
மாகோடி மாகோடி மாகோடி யொன்றேனு மருவாதெனைத்
தாரோடி வந்தருள் சங்கரற் கேவாய்த்த தந்திமுகனே.

தந்திமுகனேயெங்கள்சிந்தைநிறைவேதுங்கமால்விடையின்
தந்தமுத லேயன்பர் தந்தமு லேயிந்த தாவை நகர்வாழ்
ஐந்துகர னேயுன்றன் மைந்துபுனைசெஞ்சரணமென்றலையிலே
தந்துமிக வேயென்றன் சிந்தைகுடி கொண்டருளு கின்ற
[பொருளே (2)

பொருளே மிகக்கொண்டு பொன்னடித் தலமதைப் போற்றி
[செய்யும்
அருள்சேர் மனத்தரா மன்பருக்கென்றென்று மாறவாத
அருளே மிகச்செய்யு மைங்கரன் வாழுமூ ரேதுவென்னின்
திருவாரு முக்கனித் தண்பொழில் சூழுநற் றாவையூரே (3)

தாவையூ ரென்னுமித் தாவருந் நகர்தனில் வாழுகின்ற
பூவையுங் கிளிகளும் புள்ளொலி யோடுமே பொலிவதாகிக்
கோவைகள் கோவைக ளாகியே கொண்டுமெங் கோனதாருந்
தாவைவா ழும்பல வாணனை யென்றுமே வாழ்த்துமன்றே.

வாழ்த்துமல் வானவர் கோனவன் றன்பெரு வாழ்வதெய்த
ஆழ்த்துமம் மாகட லங்கையிற்கொண்டவன் றன்கொணர்ந்த
தீர்த்தமே சேர்சிறு குண்டிகை தன்னைநற் கொடியதாய்வந்
தார்த்துமே வீழ்த்துவ ரென்செயார் தம்பெரு மன்பருக்கே.

அன்பினைக் கொண்டவவ் வகத்தியன் தன்பெருங்கைகபித்தித்
தென்பிழை யாவுமே பொறுத்தருளென்றென்று வின்றணிய
கன்றினை நினைந்துமே கதறுறு மாவதே போற்கதறி
யன்றுடன் மும்முறை தலையினிற் குட்டின னன்புடனே. (6)

அன்பினல் வினைபவ ருள்ளநற் கமலமே யதைவிரும்பி
சென்றிடுந் தாவைவா ழும்பலவாணனி னின்புதல்வன்
வன்பிறு வியோகெய்தி வாழ்கின்ற யோகிகள் தம்மினுமிவ்
வன்பினல் வாழ்பவர் தாம்பெறும் பேறெவர் சாற்றுவரே (7)

சாற்றருந் தாவையிற் சண்முகற் கேழுத்த தந்திப் பிரான்
பாற்கடற் பள்ளிகொள் பங்கயக் கண்ணனுஞ் ஞானிதானும்
சாற்றிய தேவர்முப் பத்துமுக் கோடியுந் தேவர்கோனும்
போற்றிநின் பொன்னடி யென்றிடப் புவிபுரந் தருளுவாரே.

அருள்பொழி கற்பக மன்பர்தம் வைப்பெம் மகம்புகுந்து
இருள்கெட வோட்டுநல் லொளிவிடு சோதிச் சுடர்விளக்கு

அருள்தரு தில்லையிற் சிற்றம் பலத்தோ னகம்மகிழ
அருள்வழி தோன்றிய ஆதிமூ லத்தாவை நாயகம்மே (9)

நாயகம் பேசிட ஞானிலத் தேயுள நான்மறைக்கும்
நாயகம் மாயுறை ஞானிகள் போற்றுமக் நல்லெழுத்தாம்
ஞாயகந் தானென நல்லுருக் கொடுமிவண் கண்ணிவந்து
நாயகம் மாயுறை தாவைவிக் னேசரற் றேவமணியே. (10)

திரு ஒருபாவொரு பஃது முற்றிற்று.

மங்கலம்.

மங்கலம் மங்கலம் மங்கலம்
நித்தியசுப மங்கலம்.

1. ஆனைமுகத்தையனுக்கு; அம்பிகை தனையனுக்கு
தானெனையாள் சண்முகற்குத்; தக்கமுன்னோன்
தனக்கு —மங்கலம்

2. தாவைகுடி கொண்டவற்கு; தாயிலிசங்கரற்கு நல்ல
பாவையுமை பார்க்கவரும்; பாலகனுங் கயமுகற்கு
—மங்கலம்

3. சோதிவடிவானவர்க்கு; சுந்தரநற் றாதருக்கு
தேவியுமாதேவியற்கு; சிவகௌரியம்மையற்கு -மங்

4. வள்ளிமணவாளருக்கு; வல்வினைகள் தீர்ப்பவற்கு
புள்ளிமயில்லோலருக்கு, புண்ணியசொரூபருக்கு -மங்

உ

☞ கவனிப்பு: தாரண ஆவணி மீ 10வ
(25-8-44) மகா கும்பாபிஷேகமும், ஸ்ரீ நடேசர்
நவக்கிரகங்கள் சண்டேசுரர் பிரதிஷ்டையும்.

குமார[illegible]வ[illegible]ப்புலவர் நூலகம்
[illegible]ரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

ஸ்ரீ ...
புலவகரகம்,
...
இலங்கை.

தாவடி

ஸ்ரீ அம்பலவாணவேத விநாயகராலயப் பரிபாலன சபை.

தலைவர்: திருவாளர் பொ. கா. சோமசுந்தரம் (Proctor) [அவர்கள்

பஞ்சாயத்தார்கள்:

1. பிரம்மஸ்ரீ அ. கணேசக்குருக்கள்
2. திரு சு. முத்தையா (Pensioner)
3. „ வே. த. கந்தையா (தனாதிகாரி)
4. „ ஐ. கந்தையா (காரியதரிசி)
5. „ த. அப்பச்சிப்பிள்ளை

தாவடி

சைவ இளைஞர் சங்கம் (ஆரம்பம் 1939)

தலைவர்: திருவாளர் பொ. கா. சோமசுந்தரம் அவர்கள்

உபதலைவர்கள்: 1. பிரம்மஸ்ரீ அ. கணேசக்குருக்கள்
2. திரு சு. முத்தையா
3. „ வை. தாமோதரம்பிள்ளை
4. „ ஆ. பொன்னம்பலம்

காரியதரிசி: திரு செ. சிவப்பிரகாசம்
உப „ „ க. பாமு
தனாதிகாரி „ சு. இராமலிங்கம்
உப „ „ க. மாணிக்கம்
கணக்குப் பரிசோதகர்: திரு சி. வீரசிங்கம்

திருவாக சபையினர்: திரு 1. த. அப்பச்சிப்பிள்ளை
„ 2. வே. த. கந்தையா
„ 3. ஐ. கந்தையா
„ 4. வே. தம்பையா
„ 5. ஏ. சாம்பசிவம்
„ 6. செ. ஆறுமுகம்